## பலாகல பிரதேச சபை
## அநுராதபுரம் மாவட்டம்

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 08 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 ஜுலை 22 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்டம்பர் 04 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பலாகல பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் வட்டி வருமானம் ரூபா 663,452 தொகை நிதிக்கூற்றுகளில் ரூபா 551,865 தொகையாக காண்பிக்கப்பட்டிருந்ததால் ரூபா 111,587 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆண்டுக்கு உரிய சரியான வருமானம் இனங்காணப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ii) | மீளாய்வாண்டின் வாகனங்கள் மற்றும் கட்டிடங்களைப் புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்தல் செலவுகள் ரூபா 341,451 பெறுமதியான தொகை மூலதனமாக்கப்படவில்லை. | மூலதனச் செலவுகள் நிதிக்கூற்றுகளில் சரியாக குறிப்பிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

(ஆ) கணக்காய்விற்கு தேவையான எழுத்து மூல சான்றுகள் காணப்படாமை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 19,585,219 பெறுமதியான 03 கணக்குகளுக்கு உரிய ஏற்றுக் கொள்ளத்தக்க சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுகளில் குறிப்பிடப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தக் கூடிய அத்தாட்சிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இல் 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு | வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | செயலாற்றல் அறிக்கையானது தேவையான தகவல்களை உள்ளடக்கியதாக வேறாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி 161 மற்றும் 162 | அறிமுகப்படுத்தப்பட்ட மாதிரிகளில் நிதிக்கூற்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | விதிகளின் பிரகாரம் உரிய மாதிரிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (இ) | 2006 நவம்பர் 14 ஆம் திகதியிட்ட இலக்கம் PL 07/01/53 உடைய உள்ளூராட்சி புனரமைப்பு சுற்றறிக்கை | | | |
| i. | இலக்கம் 09 | மயானங்களின் ஆவணங்களைப் பேணுதல், பிரசுரித்தல் மற்றும் மதில் வேலிகளை அமைத்துப் பாதுகாத்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மயானங்கள் பிரதேச செயலாளரால் சபையின் ஒப்படைக்கப்படவில்லை. பிரதேச செயலாளருடன் கலந்துரையாடி உரிய மரண உதவிச் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | சங்கத்துடன் சேர்ந்து பாதுகாப்பு வேலிகளை அமைக்கும் பணியை மேற்கொள்கிறேன் . |
| ii. | இலக்கம் 06.2.2(iii) | தொடர்ச்சியாக செயற்படுத்தப்பட்டு வரும் பாதை பராமரிப்பு முறை பின்பற்றப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பராமரிப்புக்காக செயற்படுத்த எண்ணியுள்ள நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளடக்கிய வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| | | சபைக்குரிய பாதைகளை வர்த்தமானியில் வெளியிடப்படாதிருந்ததுடன் கொண்டு செல்லக் கூடிய அதிக பட்ச எடை காட்சிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வீதிகளை வர்த்தமானி யில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படுவதோடு கொண்டு செல்லக் கூடிய அதிக பட்ச எடையைக் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 1645 | சபையின் வாகனங்களுக்கு உரிய மாதாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் சாராம்சங்கள் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்பு கணக்காய்வாள் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்துக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருங்காலத்தில் அனுப்ப நடவடிக்கை எடுக்கிறேன். |
| (உ) | 2009 ஏப்ரல் 16 திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | வருகை மற்றும் வெளியேறலை உறுதிப்படுத்துவதற்காக விரல் அடையாள இயந்திரம் உபயோகப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | விரல் அடையாள இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் அதை செயற்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,810,858 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,870,343 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,270,000 | 1,420,560 | 829,110 | 659,050 | 1,180,000 | 1,439,560 | 1,439,560 | 67,600 |
| வாடகை | 3,094,500 | 9,595,811 | 9,019,661 | 639,750 | 2,192,000 | 1,750,830 | 1,880,496 | 63,600 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 300,150 | 241,535 | 241,535 | - | 310,500 | 342,430 | 342,430 | - |
| ஏனைய வருமானம் | 6,870,500 | 15,183,599 | 18,928,536 | 5,500,075 | 6,902,300 | 8,836,092 | 15,592,296 | 9,245,012 |
| மொத்தம் | 11,535,150 | 26,441,505 | 29,018,842 | 6,798,875 | 10,584,800 | 12,368,912 | 19,254,782 | 9,376,212 |

#### 2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் தலைமை செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2019 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 | முத்திரைக் கட்டணங்கள் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணங்களைத் | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணமான ரூபா 5,410,375 பெறுமதியான தொகையில் ரூபா 4,000,000 பெறுமதியான |

| | | |
|---|---|---|
| இல் கிடைக்க வேண்டியதாக காணப்பட்ட நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 5,410,375 மற்றும் முத்திரைக்கட்டணம் ரூபா 89,700 ஆகும். | தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் பிரதான விடயங்கள் 28 ஐ நிறைவேற்றுவதற்காக துணை விதிகள் விதிக்கப்பட வேண்டும் எனினும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை உரிய விடயங்கள் தொடர்பாக துணை விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | துணை விதிகளை விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த விடயங்களுக்கு உரிய அமைச்சரினால் முன் வைக்கப்பட்டிருக்கும் அனைத்து துணை விதிகளையும் தழுவி தேவைக்கேற்ப துணை விதிகளை விதிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

(ஆ) சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் 01 திகதியிட்ட 2034/36 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பிளாஸ்டிக் உள்ளடங்கிய கழிவுகளை திறந்த வெளியில் எரிக்கக் கூடாது என்று இருந்த போதிலும் சபையினால் சேகரிக்கப்படும் அனைத்து கழிவுகளும் இரண்டு இடங்களில் இடையிடையே எரிக்கப்பட்டிருந்தன. | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்துக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையினால் கொட்டப்படும் பொலிதீன் மற்றும் ஏனைய கழிவுகளை உணவாகக் கொள்ள அடிக்கடி விலங்குகள் வருவதால், அந்த விலங்குகளுக்கு உயிராபத்து காணப்பட்டமை தெரிய வந்தது. |

(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030 இன் இலக்குகள் 06 தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும் அந்த இலக்குகளை பூர்த்தி செய்தருந்தமை தொடர்பாக வெளிப்படுத்தப்படவில்லை. | இந்த இலக்குகளையும் நோக்கங்களையும் இனங்கண்டு செயற்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை உரிய கால எல்லைக்குள் பூர்த்தி செய்யத் தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் மோட்டர் க்ரேடர் இயந்திரம் மற்றும் மண் பதப்படுத்தல் இயந்திரம் ஆகியவற்றை வாடகைக்கு விட்டதனால் 20 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 639,750 பெறுமதியான தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய கணக்கு மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | மோட்டர் க்ரேடர் நிலுவையான ரூபா 639,750 பெறுமதியான தொகையில் ரூபா 376,650 பெறுமதியான தொகையை அறவிட்டுள்ளதோடு எஞ்சிய நிலுவைத் தொகையை அறவிடத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டில் இருந்து 2018 ஆம் ஆண்டு வரை செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணமான ரூபா 388,070 பெறுமதியான தொகை செலுத்தித் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை செலுத்தித் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சபைக்குரிய நிதியின் அளவு மிகக் குறைந்த அளவில் காணப்படுவதால் சபையின் நிதியைக் கட்டுப்படுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது. நிதி சாத்தியத்தின் அடிப்படையில் நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கடந்த 03 ஆண்டுகளுக்கும் மேலாக 04 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 304,339 தொகை பெறுமதியான ஊழியர் கடன் அறவிடப்பட வேண்டியிருந்தது. | ஊழியர் கடன்களை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒரு உத்தியோகத்தர் காலமாகியுள்ளதோடு மற்றுமொரு உத்தியோகத்தரினின் ஆவணக் கோப்புகளைக் காணவில்லை. மற்ற உத்தியோகத்தரின ின் பிணையாளியிடம் இருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மண் பதப்படுத்தும் இயந்திரத்தை 336.5 மீற்றர் மணித்தியாலங்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும், உரிய வருமான ஆவணத்தில் வேலை செய்த மீற்றர் மணித்தியாலங்கள் 294 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததனால் ரூபா 85,000 தொகை பெறுமதியான வருமானத்தில் அறவிடப்பட வேண்டிய 42.5 மீற்றர் மணித்தியாலங்கள் செலுத்தப்பட்டமை தொடர்பான தகவல்கள் இருக்கவில்லை. | வருமான ஆவணங்களோடு ஒப்பிடப்பட வேண்டும். | மண் பதப்படுத்தும் இயந்திரம் பயன்படுத்தப்பட்ட மணித்தியாலங்களின் அளவு பாதை செப்பனிடும் வாரத்தில் பயன்படுத்தப்பட்டதால் வருங்காலத்தில் இவ்வாறான சிக்கல்கள் ஏற்படாதிருக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கிறேன். |
| (ஆ) | மோட்டர் கிரேடர் இயந்திரம் ஆனது 449.2 மீற்றர் மணித்தியாலங்கள் செலுத்தப்பட்டிருந்த போதிலும் உரிய வருமான ஆவணத்தில் வேலை செய்த மணித்தியாலங்கள் 375.30 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, ரூபா 369,500 | இயந்திரத்தின் மீற்றர் மணித்தியாலங்கள வருமான ஆவணத்துடன் ஒப்பிடப்பட வேண்டும். | மோட்டர் க்ரேடர் இயந்திரம் பயன்படுத்தப்பட்ட மணித்தியாலங்களின் அளவு பாதை செப்பனிடும் வாரத்தில் பயன்படுத்தப்பட்டதால் வருங்காலத்தில் இவ்வாறான சிக்கல்கள் ஏற்படாதிருக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கிறேன். |

| | | |
|---|---|---|
| பெறுமதியான தொகை வருமானம் அறவிடப்பட வேண்டிய 73.9 மணித்தியால மீற்றர்களின் தகவல்கள் இருக்கவில்லை. | | |

3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முச்சக்கர வண்டியொன்றைக் கொள்வனவு செய்த போது 2018/2019 தயாரிக்கப்பட்ட ஆண்டு முச்சக்கர வண்டியின் விலைக்கு, 2016 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட முச்சக்கர வண்டியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | கொள்வனவு செயற்பாடுகள் சரியாக செய்யப்பட வேண்டும். | முச்சக்கர வண்டியைக் கொள்வனவு செய்தல் விவரக் குறிப்புகளுக்கு இணங்க செய்யப்பட்டிருப்பதோடு, முச்சக்கர வண்டியானது 2016 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டது என்பது பதிவுச் சான்றிதழைப் பெற்ற பிறகுதான் உறுதிப்படுத்தப்பட்டது. ஆகவே இடம்பெற்ற நட்டத்தை நிறுவனத்திடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | அரசாங்க கொள்கைகளுக்கு ஏற்ப புதிய வாகனங்கள் தயாரிப்பாளர்களிடமிருந்து அல்லது அதிகாரபூர்வ முகவர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட வேண்டும் எனினும் 1995 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட பழைய, முன்பு உபயோகப்படுத்தப்பட்ட முச்சக்கர வண்டியொன்று ரூபா 248,000 பெறுமதியான தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | அரசாங்க கொள்கைகளுக்கு ஏற்ப கொள்வனவு செய்யப்பட வேண்டும | வியாபார இலாபத்தை உத்தேசித்து புதிய முச்சக்கர வண்டியொன்றைக் கொள்வனவு செய்ய காலம் எடுப்பதால் தொடர்ச்சியாக தயாரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் காரணமாக பழைய முச்சக்கர வண்டியொன்றைக் கொள்வனவு செய்ய நேர்ந்தது. |

3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

3.6.1 சொத்துக்களை ஆவணப்படுத்தாதிருத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|

| | | |
|---|---|---|
| சபை வளவில் உள்ள பழைய L 200 வகையான கெப் வண்டியொன்று இனங் காணப்பட்டு பதிவேடுகளுக்கு உட்படுத்தியிருக்க வில்லை. | சபையினால் பயன்படுத்தப்படும் அனைத்து சொத்துக்களையும் கணக்கிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த வாகனமானது நிதியமைச்சுக்குரிய வாகனம் என்பதோடு இலங்கை இராணுவத்தால் கொண்டு செல்லப்பட்டு மீண்டும் கொண்டு வரப்பட்ட ஒன்றாகும். இதன் பயன்பாட்டு ஆயுட்காலம் முடிவடைந்துள்ளது. இதை அகற்றுவதற்கு உள்ளூராட்சித் திணைக்களத்திடம் அறியத் தரப்பட்டுள்ளது. |

### 3.6.2 சொத்துகள் மூலம் கிடைக்க வேண்டிய வருமானங்களைப் பெற்றுக் கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குரிய ஆண்டியாகல வியாபார கட்டிடத் தொகுதியின் மேல் மாடியில் 05 கடைகள் மீளாய்வாண்டில் குத்தகைக்கு விடப்பட்டிருக்கவில்லை. | குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுத்து வருமானம் அறவிடப்பட வேண்டும். | குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. |

### 3.6.3 கையேற்கப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பயன்படுத்தப்படும் ரூபா 1,800,000 பெறுமதியான மோட்டார் வாகனங்கள் மற்றும் பெறுமதி இனங்காண முடியாத மோட்டார் சைக்கிள் மற்றும் 02 டேலர்களின் உரிமையை சபைக்கு கையேற்க நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | சபையினால் பயன்படுத்தப்படும் அனைத்து சொத்துக்களினதும் உரிமையை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த வாகனங்கள் உள்ளூராட்சித் திணைக்களத்துக்குச் சொந்தமானவை என்பதோடு, அவற்றைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். மோட்டார் சைக்கிள் ∴பேன் ஸ்ரீலங்கா செயற்திட்டத்தால் வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு 02 டேலர்கள் மற்றும் மோட்டார் வாகனம் தொடர்பான தகவல்கள் இல்லாத காரணத்தால் அவற்றைக் கையகப்படுத்திக் கொள்ள இயலாமல் உள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபையினால் பயன்படுத்தப்படும் ரூபா 10,051,000 பெறுமதியான 52 ஏக்கர் 02 ரூட் அளவிலான காணியை சபையின் பெயரில் கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் பயன்படுத்தப்படும் அனைத்து சொத்துக்களினதும் உரிமையை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கையேற்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | சபைக்குரிய 490,000 பெறுமதியான ட்ரக்டர் டேலர்கள் இரண்டு மற்றும் தண்ணீர் பவுசர்கள் இரண்டு பதிவு செய்யப்படாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. | வாகனத்தைப் பதிவு செய்து போக்குவரத்தில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதிவு செய்யத் தேவையான தகவல்கள் இல்லாமையால் கையேற்க முடியாமல் உள்ளது. |
| (ஈ) | மீளாய்வாண்டில் ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி ரூபா 248,000 பெறுமதியான தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த முச்சக்கர வண்டியைப் பதிவு செய்து உரிமையைக் கையேற்க கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிமையை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

3.6.4 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 1,542,228 பெறுமதியான கட்டிடமொன்று மற்றும் பெறுமதியை இனங்காண முடியாத 02 கட்டிடங்கள் உபயோகமற்றுக் காணப்பட்டன. | சபைக்குரிய அனைத்து சொத்துகளும் பயனுள்ள விடயங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். | புப்போகம கழிவறைத் தொகுதிக்கு மக்களின் வருகை குறைந்த அளவில் காணப்படுவதோடு ஒரு கட்டிடத்தை பிளிசரு செயற்திட்டத்துக்கு பயன்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. ஆண்டியாகல கழிவறைத் தொகுதிக்கு தண்ணீரைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | ரூபா 230,600 பெறுமதியான அரிசி மாவினால் வெதுப்பக தயாரிப்புகளைச் செய்யும் இயந்திரம் 2014 ஆம் ஆண்டில் இருந்து செயலற்றுக் காணப்பட்டது. | சபைக்குரிய அனைத்து சொத்துகளும் பயனுள்ள விடயங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். | பயன்படுத்தக் கூடிய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை புதிய வெதுப்பகத்தில் பயன்படுத்தி உபயோகமற்ற இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கிறேன். |

3.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நடத்தப்படும் வெதுப்பகம் மற்றும் உணவுச்சாலையால் 2019 ஆம் ஆண்டில் ரூபா 398,568 பெறுமதியான நஷ்டம் ஏற்பட்டிருந்தது. | நஷ்டம் ஏற்படாத விதத்தில் மக்கள் சேவை செயற்திட்டங்கள் நடத்தப்பட வேண்டும். | பொருத்தமான முகாமைத்துவத்தால் வருங்காலத்தில் இந்த நஷ்டத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வட மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் திகதியிட்ட இலக்கம் 04/2015 உடைய சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் பொறுப்பு கூற வேண்டிய உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வருங்காலத்தில் பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து தேவையான அறிக்கையை வழங்க நடவடிக்கை எடுக்கிறேன். |